## திருவண்ணாமலை, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அவர்களின் செயல்முறைகள்

**பிறப்பிப்பவர் : திரு. ம.இராஜசேகரன், B.Tech.,**

**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018–2019 மற்றும் 2019–2020 வரையிலான காலத்திற்கு இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

---

ந.க.எண்.அ/672/2021 நாள்: 11.08.2021

படிக்கப்பட்டது

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம் எண்.2387/PSD-I/2020, நாள்.28.05.2020.
2. சென்னை–6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/16386/2020–1, நாள்.29.07.2020.

------

மேலே இனம் 1–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில், தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் தொகுதி IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், "The regularization is subject to the outcome of the WP's pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Service Examination - IV for the year 2018-2019 and 2019-2020."–ன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு பணியினை வரன்முறை செய்யலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, கீழ்குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர்களின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a)(i)–ன்படி பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்தும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் பொது விதி 32–ன் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் மூன்று ஆண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | **திருமதி. த.அனிதா,**<br>இளநிலை உதவியாளர்,<br>தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம்,<br>திருவண்ணாமலை | **06.08.2020**<br>முற்பகல் | **06.08.2020**<br>முற்பகல் |
| 2 | **திரு. வி.தீபன் சக்கரவர்த்தி,**<br>இளநிலை உதவியாளர்,<br>தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம்,<br>திருவண்ணாமலை | **07.08.2020**<br>முற்பகல் | **07.08.2020**<br>முற்பகல் |

மேலும், தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் என்றும், நிர்ணயிக்கப்பட்ட துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

தொழிலாளர் உதவி ஆணையர்,
(அமலாக்கம்), 11/8/2021
திருவண்ணாமலை (கூ.பொ).

பெறுநர்
கலம் 2–ல் காணும் பணியாளர்கள்.

11.8.21

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**
1. தொழிலாளர் ஆணையர், சென்னை.
2. கூடுதல் தொழிலாளர் ஆணையர், சென்னை.
3. தொழிலாளர் இணை ஆணையர், வேலூர்.

**நகல்**
1. பணிப்பதிவேடு
2. இருப்புக்கோப்பு / உதிரி.